Every Student Counts கருத்துக் கணிப்பு 2022-23

அன்பார்ந்த குடும்பத்தினருக்கு,

மாணவர் மற்றும் குடும்பத்தினரின் கருத்து எமக்கு முக்கியமானது. யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபை, மாணவர் தொகை மற்றும் பாடசாலைச் சமூகங்கள் தொடர்பாக மேலும் சிறப்பாக அறிந்துகொள்வதற்கு உதவும் வகையில், Every Student Counts கருத்துக் கணிப்பை மாணவர்கள் (தரம் K-12) மத்தியில் நடத்தவிருக்கின்றது.

மாணவர்களின் சாதனை மற்றும் நல்வாழ்வு, தடைகளை அடையாளம் கண்டு நீக்குதல் மற்றும் கூடிய சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பாடசாலைச் சூழலை உருவாக்குதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு, கருத்துக் கணிப்பின் விவரங்கள், சபைக்கும், பாடசாலைத் திட்டமிடல் பிரிவிற்கும் தெரிவிக்கப்படும்.

பின்வருவன சார்ந்த கேள்விகளை உள்ளடக்கியதாகக் கருத்துக் கணிப்புகள் அமைந்திருக்கும்:

- ஈடுபாடு மற்றும் கற்றல்
- நல்வாழ்வு மற்றும் மன ஆரோக்கியம்
- உயர் பாடசாலையில் பாடத்திட்டப் பாதைகள்
- பாதுகாப்பு, பாகுபாடு மற்றும் கொடுமைப்படுத்துதல் (bullying)
- சக மாணவர்கள் மற்றும் ஊழியர்களுடனான உறவுகள்
- சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கற்றல் சூழல்கள்
- மாணவர் அடையாளம் (மாணவர் தொகை)

கற்றல் அனுபவங்கள் வெவ்வேறு மாணவர் குழுக்களுக்கிடையில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அறிவதற்காக மாணவர்களின் அடையாளங்கள் (உ.ம்., இனம் மற்றும் பாலினம்) சம்பந்தமான கேள்விகளைக் கேட்கின்றோம்.

2023ம் ஆண்டு இலைதுளிர் காலத்தில், தரம் 4-12 வரையான மாணவர்கள் மாணவர் கருத்துக் கணிப்பைப் பூர்த்தி செய்வதற்காக அழைக்கப்படுவதுடன், அதனைப் பூர்த்தி செய்வதற்கான வகுப்பறை நேரமும் வழங்கப்படும். தரம் K-3 வரையான மாணவர்கள் வீட்டில்

அவர்களின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது பராமரிப்பாளருடன் கருத்துக் கணிப்பைப் பூர்த்தி செய்வதற்கு அழைக்கப்படுவார்கள். K-3 கருத்துக் கணிப்பின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளும் கிடைக்கும்.

கருத்துக் கணிப்பிற்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்காக, பல்வேறு விதிவிலக்கான வசதிகள் தேவைப்படும் பங்கேற்பாளர்களும் உள்வாங்கப்படுவார்கள். கருத்துக் கணிப்பு செயற்படுத்தப்படுவதற்கு முன்பாக, சபையின் இணையத்தளத்தில் கருத்துக் கணிப்பின் பிரதியொன்று உங்களது பார்வைக்காகக் கிடைக்கும்.

கருத்துக் கணிப்புகள் தன்னார்வமானது மற்றும் **இரகசியமானது** எனினும் அநாமதேயமானது அல்ல. இதன் பொருள், பெயர் போன்ற அடையாளம் காணும் தகவல்கள் மாணவர்களிடமிருந்து கேட்கப்பட **மாட்டாது**. தனிப்பட்ட பதில்கள் பதிவுசெய்யப்பட மாட்டாது. தகவல் சேகரிப்பு மற்றும் தக்கவைத்தல் போன்றவை சபைக் கொள்கை மற்றும் பதிவுகள் மற்றும் தகவல் மேலாண்மையின் நடைமுறை #160.0 ஐப் பின்பற்றும்.

இந்த முக்கியமான முன்னெடுப்பு, மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. இதனால் பாடசாலைச் சபை பல்வேறு மாணவர் குழுக்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள முடியும் மற்றும் கற்றலுக்கான தடைகளை அடையாளம் காணமுடியும். கருத்துக் கணிப்புகளின் முடிவுகள் நிர்வாகத்தினர், பாடசாலைகள், சபைத் திணைக்களங்கள் மற்றும் பொதுமக்களுடன் 2023-24 கல்வி ஆண்டில் பகிரப்படும்.

கருத்துக் கணிப்பின் வளர்ச்சிக் கட்டத்தின்போது, குடும்பத்தினர் தமது பின்னூட்டத்தை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கப்படும். மேலதிகத் தகவல்கள் கிடைக்கும்போது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்படும்.

2018ம் ஆண்டில், YRDSB அதன் முதலாவது Every Student Counts கருத்துக் கணிப்பை நடத்தியது, அந்தக் கருத்துக் கணிப்பில் பெறப்பட்ட தரவுகள், சபையின் இணையத்தளத்தில் உள்ளது.

கருத்துக்கணிப்பு தொடர்பாக உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், மேலதிக விபரங்களை சபையின் இணையத்தளத்தில் பார்வையிடவும் அல்லது research.services@yrdsb.ca ஐத் தொடர்புகொள்ளவும்.

உங்களது ஆதரவிற்கு நன்றி.